**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, தஞ்சாவூர்.**

**முன்னிலை: செல்வி. S. T. கனிமொழி, L.L.M.,**

**நீதித்துறை நடுவர் எண்.I,**

**தஞ்சாவூர்.**

2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29-ம் நாள் புதன் கிழமை

2057 திருவள்ளுவராண்டு பராபவ வருடம் சித்திரை திங்கள் 16 ம் நாள்

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்.72/2021**

CNR NO.TNTJ05-000670-2021

அரசுக்காக, காவல் ஆய்வாளர்,

நகர கிழக்கு காவல்நிலையம், தஞ்சாவூர்.

குற்ற எண்.1340/2020. .....குற்றமுறையிடுபவர்

//எதிர்//

1) கார்த்திகேயன், வயது 34/2026, த/பெ. முனியாண்டி,

முதல் தெரு, அண்ணா காலணி, தொல்காப்பியர் சதுக்கம், தஞ்சாவூர்.

2) ஹரிபிரபு, வயது 27/2026, த/பெ. மனோகர்,

கம்பி பாலம், தொம்பன்குடிசை, தஞ்சாவூர்.

(இவ்வழக்கின் 1 வது எதிரி கடந்த 24.03.2026 அன்று சிசி எண்.208/2026

என தனியாக பிரித்தெடுக்கப்பட்டுள்ளார்) ....எதிரிகள்

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் கடந்த 26.03.2021 அன்று சி.சி.எண். 72/2021 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 29.04.2026 அன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு கொண்டுவரப்பட்டதில் குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும், 2 வது எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் செல்வி. S. ஜெயபாரதி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களையும், சாட்சியங்களையும் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....,

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.04.29 17:11:38 +0000

## தீர்ப்புரை

**I) குற்ற அறிக்கையின் சுருக்கம்-**

கடந்த 24.09.2020 ம் தேதி இரவு 10.00 மணிக்கு தஞ்சாவூர் கீழராஜவீதி டோர் இண்டியா கடை முன்பாக வாதி பஹத்உசேன் நிறுத்தி வைத்திருந்த வாதிக்கு சொந்தமான TN-49-AK-3907 பதிவெண் கொண்ட Splendor Pro Kick Cast Splender Plus இருசக்கர வாகனத்தை இவ்வழக்கின் எதிரிகள் திருடி சென்று வாதிக்கு பண இழப்பை ஏற்படுத்தி குற்றம் புரிந்துள்ளதாக தெரிவித்து, தஞ்சாவூர் நகர மேற்கு காவல்நிலைய ஆய்வாளர் எதிரிகள் மீது இதச பிரிவு 379 ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

II) இந்நிலையில் வழக்கு விசாரணையின் போது இவ்வழக்கின் எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் குவிமுச பிரிவு 207-ன் கீழ் ஆவணங்களின் நகல் இலவசமாக வழங்கப்பட்டது. பின்னர் போதிய அவகாசம் கொடுத்து குற்றஞ்சாட்டப்பட்டவர்களிடம் குற்றம் பற்றி விளக்கிக்கூறி வினவப்பட்ட போது அவர்கள் குற்றத்தை மறுத்துள்ளார்கள். ஆவணங்களின் அடிப்படையில் கு.வி.மு.ச. பிரிவு 240(i)ன் கீழ் குற்றம்சாட்டப்பட்ட எதிரிகள் மீது இதச பிரிவு. 379 ன் கீழான குற்றச்சாட்டு வனையப்பட்டு, குற்றச்சாட்டை விளக்கிக் கூறி வினவிய போது குற்றம்சாட்டப்பட்டவர்கள் தாங்கள் குற்றவாளி இல்லை என்றார்கள். எனவே அரசு தரப்பு சாட்சிய விசாரணைக்கு வழிவகை செய்யப்பட்டது.

III) இவ்வழக்கில் அரசு தரப்பில் அசா.1 முதல் அ.சா.4 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையான சான்றாவணங்கள் மற்றும் அசாபொ.1 சான்றுப்பொருள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.04.29 17:11:45 +0000

**IV)** இந்நிலையில் இவ்வழக்கின் 1 வது எதிரி கடந்த 24.03.2026 அன்று சிசி எண்.208/2026 என தனியாக பிரித்தெடுக்கப்பட்டுள்ளார். அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து 2 வது எதிரிக்கு பாதகமான அம்சங்கள் குறித்து 2 வது எதிரியிடம் குவிமுச பிரிவு 313(1)(பி)ன் கீழ் வினவியபோது 2 வது எதிரி அதனை மறுத்து கூறி 2 வது எதிரி தரப்பில் சாட்சிகளோ சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை.

V) அரசு தரப்பில் வாதிட்ட கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் இந்த வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்ப்பட்டு நிரூபணம் செய்யப்பட்டது என்றும், அரசு தரப்பு சாட்சிகள் அதற்கு ஆதரவாக உள்ளது என்றும், எனவே எதிரிக்கு உரிய தண்டனை வழங்க வேண்டுமென வாதிட்டார். மாறாக, எதிரி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் அ.சா.1 தனது முதல் விசாரணையிலேயே எதிரிக்கு எதிராக எவ்வித சாட்சியமும் அளிக்காத நிலையில் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை இந்த குற்றச்சாட்டுகளில் இருந்து விடுதலை செய்ய வேண்டுமென வாதிட்டார்.

VI) **இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவென்றால் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள சட்டப்பிரிவு** 379 IPC-**ன் படியான குற்றச்சாட்டு தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

VII) இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, வழக்கின் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

VIII) இவ்வழக்கில் எதிரிகள் வாதிக்கு சொந்தமான TN-49-AK-3907 பதிவெண் கொண்ட Splendor Pro Kick Cast Splender Plus இருசக்கர வாகனத்தை கடந்த 24.09.2020 ம் தேதி

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI Date: 2026.04.29 17:11:51 +0000

10.00 மணிக்கு தஞ்சாவூர் கீழராஜவீதி டோர் இண்டியா கடை முன்பாக நிறுத்தியிருந்ததை இவ்வழக்கின் எதிரிகள் ஆதாயம் கருதி இருசக்கர வாகனத்தை திருடிச் சென்றுள்ளார்களா? என்பதை ஆராய்கையில்,

1. இவ்வழக்கின் புகார்தாரர் அசா.1 பஹத்உசேன் தனது முதல் விசாரணையில், "கடந்த 24.09.2020 அன்று காலை 9.00 மணிக்கு தன் அம்மா சித்தி நிலோக் பெயரில் உள்ள ஸ்பிளண்டர் புரோ டிஎன் 49 ஏகே 3907 என்ற இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு தெற்கலங்கம் பழைய பேருந்து நிலையம் அருகே உள்ள Jio Metric Computer Center-ல் படிப்பதற்காக அந்த மையத்தின் முன்பாக பூட்டி நிறுத்தியிருந்ததாகவும், வகுப்பு முடிந்து மதியம் 3.00 மணியளவில் இருசக்கர வாகனத்தை எடுக்கச் சென்றபோது வண்டியை அங்கு காணவில்லை என்றும், தானும் தனது நண்பர் சிந்தனைச் செல்வனும் அக்கம் பக்கம் தேடிப்பார்த்ததாகவும், வண்டி கிடைக்கவில்லை என்றும், தான் சென்னைக்கு அலுவலாக சென்றிருந்ததாகவும், அதனால் உடனடியாக புகார் கொடுக்கவில்லை என்றும், 28.09.2020 அன்று தஞ்சாவூர் கிழக்கு காவல் நிலையம் சென்று புகார் அளித்ததாகவும், தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து தன்னுடையது என்றும், அந்த புகார் மனுவை தானே எழுதியதாகவும், பின்னர் 3 மாதங்கள் கழித்து வண்டி கிடைத்திருப்பதாக போலீசார் கூறியதாகவும், தான் காவல் நிலையம் சென்று இருசக்கர வாகனத்தை அடையாளம் காண்பித்ததாகவும், அப்போது போலீசார் 2 நபர்களை காண்பித்து அவர்கள் தான் எடுத்ததாக கூறியதாகவும், அவர்களில் ஒருவரின் பெயர் கார்த்திக் என்றும், மற்றொருவர் பெயர்

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.04.29 17:11:56 +0000

ஞாபகம் இல்லை என்றும், அவர்களை தற்போது பார்த்தால் தன்னால் அடையாளம் சொல்ல இயலாது என்றும், பின்னர் நீதிமன்றத்தில் மனு அளித்து இருசக்கர வாகனத்தை இடைக்கால பொறுப்பில் பெற்றுச் சென்றதாகவும், தன்னிடம் காட்டப்படும் புகைபடத்தில் உள்ள வண்டி தன்னுடையது என்றும்" சாட்சியம் அளித்துள்ளார். அசா.1 ன் சாட்சியத்திலிருந்து கடந்த 24.09.2020 அன்று 10.00 மணிக்கு மேல் அசா.1 ன் இருசக்கர வாகனம் காணாமல் போயுள்ளதும், அதுசம்மந்தமாக புகாரை கிழக்கு காவல்நிலையத்தில் 28.09.2020 அன்று கொடுத்துள்ளார் எனவும் அறியமுடிகிறது. அதாவது சம்பவம் நடந்து 04 நாட்களுக்கு பிறகு புகார் கொடுத்துள்ளார் எனத்தெரிகிறது. மேலும் அசா.1 ன் முதல் விசாரணையில், போலீசார் அடையாளம் காண்பித்தன் பேரில் எதிரிகளை தெரியும் என்றும், **எதிரிகளை தற்போது பார்த்தால் தன்னால் அடையாளம் சொல்ல இயலாது** என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

2. இவ்வழக்கில் அசா.2, 3 பார்வை மகசர் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அசா.2 தனது முதல் விசாரணையில் "கடந்த 24.09.2020 அன்று காலை 10.00 மணிக்கு அசா.1 வகுப்பிற்காக தான் பணிபுரியும் கீழ வீதியில் உள்ள டோர் இந்தியா கம்பெனிக்கு மேலே உள்ள கம்யூட்டர் சென்டரில் வகுப்பிற்கு சென்றுவிட்டு மதியம் 3.00 மணியளவில் தனது இருசக்கர வாகனத்தை அ.சா.1 எடுக்கச் சென்றபோது காணாமல் போய் உள்ளதாகவும், அது சம்மந்தமாக அ.சா.1 கிழக்கு காவல் நிலையத்தில் புகார் அளித்ததாகவும், பின்னர் 28.09.2020 அன்று போலீசார் தங்கள் கடை அருகே விசாரணை செய்து வரைபடம் வரைந்து கொண்டு

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI Date: 2026.04.29 17:12:03 +0000

இருந்ததாகவும், மேற்படி சம்பவம் குறித்து தன்னிடம் விசாரித்து சாட்சி கையொப்பம் கேட்டதாகவும், தான் கையொப்பம் செய்ததாகவும், தன்னுடன் முபாரக் என்பவர் சாட்சி கையொப்பம் செய்துள்ளதாகவும்" சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அசா.2 ன் குறுக்கு விசாரணையில் "அ.சா.1 தனக்கு தெரிந்த நபர் என்றும், பார்சை மகசரில் உள்ள விபரங்களை படித்து பார்க்கவில்லை என்றும், போலீசார் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் பற்றி தனக்கு தெரியாது என்றும்" சாட்சியம் அளித்துள்ளார். அசா.2 ன் சாட்சியத்திலிருந்து அசா.1 க்கு தெரிந்த நபர் என்பதால் கையொப்பம் செய்துள்ளார் என்பதும், அதிலுள்ள விபரங்கள் பற்றி தெரியாது என்பதும் அறியமுடிகிறது.

3. அடுத்தபடியாக அசா.3 தனது சாட்சியத்தில் "கடந்த 28.09.2020 அன்று மதியம் 2.00 மணிக்கு கிழக்கு காவல் நிலைய ஆய்வாளர், தான் பணிபுரியும் இடத்திற்கு வந்ததாகவும், அங்கு வரைபடம் வரைந்து தன்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டதாகவும், தான் கையொப்பம் செய்து கொடுத்ததாகவும், போலீசார் சம்பவ இடத்தில் இருசக்கர வாகனம் காணாமல் போனது சம்மந்தமாக விசாரணைக்கு வந்ததாகவும், தன்னுடன் முகமது ஆரிப் என்பவர் கையொப்பம் செய்ததாகவும்" சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அசா.3 ன் குறுக்கு விசாரணையில் "அ.சா.1 தனது நண்பர் என்றும், பார்வை மகசரில் உள்ள கையெழுத்தினை தானும், அசா.2 ம் காவல் நிலையத்தில் வைத்து செய்ததாகவும்" சாட்சியம் அளித்துள்ளார். அசா.3 ன் சாட்சியத்திலிருந்து அசா.1 க்கு நண்பர் என்பதால் கையொப்பம் செய்துள்ளார் என்பதும், காவல் நிலையத்தில் வைத்து பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடத்தில்

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.04.29 17:12:08 +0000

கையொப்பம் செய்துள்ளார் என்பதும், சம்பவயிடத்தில் கையொப்பம் பெறப்படவில்லை என்பதும் புலனாகிறது.

4. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி அசா.4 ராமதாஸ் காவல் ஆய்வாளர் தனது சாட்சியத்தில் "கடந்த 28.09.2020 ம் தேதி தஞ்சை கிழக்கு காவல்நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர், பகத்உசேன் கொடுத்த எழுத்து மூல புகாரை பெற்று காவல்நிலைய குற்ற எண்.1340/2020 சட்டபிரிவு.379 இதசவின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்கில் உதவி ஆய்வாளர் தனது முதல்கட்ட விசாரணையை முடித்து மேல் விசாரணைக்காக தனது பார்வைக்கு வைத்ததாகவும், மேற்கண்ட வழக்கினை உதவி ஆய்வாளர் தனது புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு 28.09.2020 ம் தேதி 14.00 மணியளவில் வழக்கின் சம்பவயிடமான தஞ்சை கீழ அலங்கம் டோர் இந்தியா கடையின் வாசலில் சாட்சிகள் முன்பாக பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்துள்ளதாகவும், பின்னர் சம்பவயிட சாட்சிகளையும் பார்வை மகசர் சாட்சிகளையும் தனிதனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், பின்னர் தனது மேல்விசாரணைக்கு வைக்கப்பட்ட வழக்கு கோப்பினை எடுத்துகொண்டு தான் வழக்கின் சம்பவயிடத்தை பார்வையிட்டும் உதவி ஆய்வாளர் ஏற்கனவே விசாரணை செய்த பட்டியல் கண்ட சாட்சிகள் அதே சங்கதிகளை மீண்டும் தன்னிடம் கூறியதால் தான் மறுவாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றும், கடந்த 30.01.2021 ம் தேதி மதியம் 13.00 மணியளவில் கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் தொம்பன்குடிசை ஆவின் பால் பூத் அருகில் வாகன தணிக்கை செய்தபோது அவ்வழியாக சந்கேத்திற்கு இடமாக வந்த

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.04.29 17:12:15 +0000

வழக்கின் 1வது எதிரி பதிவு எண் இல்லாத இருசக்கர வாகனத்தில் வந்தபோது அவரை நிறுத்த முற்பட அவர் போலீசாரை கண்டு தப்பிக்க முற்பட எதிர்பாரா விதமாக கீழே விழுந்து லேசான காயத்துடன் இருந்தவரை உடனடியாக முதலுதவி செய்து விசாரிக்க அவர் எவ்வித அச்சுறுதலும், துன்புறுதலும் ஆசை வார்த்தைகளும் இன்றி தானாக, தன்னிசையாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை தனிநபர் சாட்சிகள் முன்பாக பதிவு செய்து சாட்சிகள் மற்றும் எதிரியின் கையொப்பம் பெற்றதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

5. மேலும் அசா.4 தனது சாட்சியத்தில், எதிரி ஓட்டி வந்த பதிவு இல்லாத கருப்பு, சிவப்பு நிற Splender pro என்ற இருசக்கர வாகனத்தை ஆஜர் செய்த வழக்கின் தடயபொருளை 14.45 மணியளவில் அதே சாட்சிகள் முன்பு மகசர் தயார் செய்து கைப்பற்றியதாகவும், 1 வது எதிரி மற்றும் வழக்கின் தடயசொத்துடன் காவல்நிலையம் வந்து எதிரியை திரேக பரிசோதனை செய்து பாரா காவல் வசம் ஒப்படைத்து அவரை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும், பின்னர் கைப்பற்றபட்ட வழக்கின் தடயசொத்தை நீதிமன்றத்திற்கு படிவம் 95 மூலமாக அனுப்பி வைத்தாகவும், சிபி நம்பர் 19/2021, பின்னர் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளை தனிதனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், இவ்வழக்கின் மற்றொரு 2 வது எதிரியை 1வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் தஞ்சை மேற்கு காவல்நிலைய குற்ற எண். 94/2021 சட்டபிரிவுகள் 379 இதச வழக்கில் 08.02.2021ம் தேதி தஞ்சை நகர துணை காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் அனுமதி பெற்று கும்பகோணம் கிளைச்சிறையில் இருந்தவரை சம்பிரதாய கைது செய்தும், PT

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.04.29 17:12:21 +0000

வாரண்ட் மூலமாக நீதிமன்றத்தில் ஆஜர் செய்ததாகவும், கடந்த 10.02.2021ம் தேதி வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் மற்றும் வழக்கின் முதல்கட்ட விசாரணை செய்த உதவி ஆய்வாளரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், அத்துடன் தனது புலன் விசாரணையை முடித்து அன்றைய தினமே வழக்கின் எதிரிகள் மீது இதச பிரிவு. 379 ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும்" சாட்சியம் அளித்துள்ளார்.

6. மேலும் அசா.4 ன் குறுக்கு விசாரணையில் "கைப்பற்றுதல் மகசரில் எதிரியின் கையொப்பம் இல்லை என்றும், சாட்சிகள் யாரும் தேதியிட்டு கையொப்பம் செய்யவில்லை என்றும், 30.01.2021 அன்று கைப்பற்றப்பட்ட வழக்கின் தடயபொருள் நீதிமன்றத்தில் 08.02.2021 அன்று ஒப்படைக்கப்பட்டது என்றும்" சாட்சியம் அளித்துள்ளார். அசா.4 ன் சாட்சியத்திலிருந்து கைப்பற்றுதல் மகசரில் எதிரியின் கையொப்பம் இல்லை என்பதும், மகசர் சாட்சிகள் தேதி குறிப்பிட்டு கையொப்பம் செய்யவில்லை என்பதும், 30.01.2021 அன்று கைப்பற்றப்பட்ட தடயப்பொருள் 9 நாட்கள் கழித்து காலதாமதமாக நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டதற்கான காரணத்தையும் அறிக்கையாக சமர்ப்பிக்கவில்லை என்பதும் தெளிவாக புலனாகிறது.

7. மேலும் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 27 ன் கீழ் சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள கீழ்கண்ட நிபந்தனைகள் அரசு தரப்பில் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். 1. எதிரிகள் போலீசாரின் பாதுகாப்பில் இருந்திருக்க வேண்டும். அந்த காவல் கைது செய்த பின்பாக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. Chandra Prakash Vs State of Rajastan 2014 (4) Supreme 646, 2. வாக்குமூலம் கொடுக்கும் நபர் குற்றம் செய்த நபராக

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.04.29 17:12:26 +0000

இருக்க வேண்டும். 3. அவர் கொடுக்கும் வாக்குமூலம், ஒப்புதல் வாக்குமூலமாகவோ அல்லது தகவலாக கூட இருக்கலாம். 4. மேற்படி, தகவலின் பேரில் புதிதாக ஒரு சங்கதிகள் தெரிய வந்திருக்க வேண்டும் மேற்படி, கூற்றுகளை பூர்த்தி செய்திருக்க வேண்டுமென்று மாண்புமிகு உச்ச நீதிமன்றம் பல வழக்குகளில் மேற்கோள் காட்டியுள்ளது. மேற்கண்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்திருந்தால் மட்டுமே அந்த ஒப்புதல் வாக்குமூலமானது ஏற்றுக்கொள்ளதக்கது என்று மாண்புமிகு உச்ச **நீதிமன்றம்** Sanjay Dutt VS St of Mahastra, through CBI (STR) AIR 2013 SC 2687 **என்ற** வழக்கில் கூறப்பட்டுள்ளது.

8. மேலும், இந்திய சாட்சிய சட்ட பிரிவு 114 ஆதாரச் சட்டத்தின் (a) விளக்கத்தின் கீழ், மேற்கண்ட உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளை பார்க்கும் போது, திருட்டு சம்பவம் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை. மேலும், குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் வெறும் சந்தேகத்தின் பேரில் பிடிபட்டனர், என்ற கருத்தில், எந்த அனுமானமும் இல்லை. வழக்கின் உண்மைகள் மற்றும் சூழ்நிலைகள் நேரில் பார்த்தவர்கள் யாரும் இல்லை என்பது தெளிவாகிறது.

9. இந்நிலையில் இதச பிரிவு 378 வரையரையை காணும்போது **"எவரேனும் ஒருவரது உடைமையில் இருந்து அசையும் பொருள் எதையேனும் அவரது சம்மதம் இல்லாமல், நேர்மையின்றி எடுத்துக்கொள்ளும் உட்கருத்துக்கொண்டு, அவ்வாறு எடுத்துக்கொள்ளும் பொருட்டு அந்தப் பொருளை நகர்த்தும் எவரொருவரும் திருட்டுக் குற்றம் செய்வதாகச் சொல்லப்படுகிறார்"** என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் எதிரி தான்

இருசக்கர வாகனத்தை திருடிச்சென்றுள்ளார் என்பது சந்தேகத்திற்கு இடம் இல்லாமல் நிரூபிக்கும் வகையில் அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சியம் அளிக்கவில்லை.

10. இந்நிலையில் சம்பவ தேதியாக 24.09.2020 என கூறப்பட்டுள்ளது. ஆனால் புகார் 28.09.2020 ல் கொடுக்கப்பட்டுள்ளது. அரசு தரப்பு 1 முதல் 3 சாட்சிகள் எதிரிகளை அடையாளப்படுத்தி சாட்சியம் அளிக்கவில்லை. காவல்துறையினர் சொன்னதன் பேரிலேயே எதிரிகளை தெரியும் என்றும், அசா.2, 3 சாட்சிகள் அசா.1 ன் நண்பர்கள் என்பதும், தனிப்பட்ட சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படாமல் அசா.1 ன் நண்பர்கள் மட்டுமே விசாரிக்கப்பட்டுள்ளதும் அரசு தரப்பு வழக்கை சந்தேகிக்கச் செய்கிறது. மேலும் பசா.6, 7 ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சிகளுக்கு நீதிமன்றத்திலிருந்து சம்மன் அனுப்பியும், பதிவுத்தபால் அனுப்பியும், அவர்கள் மேற்படி முகவரியில் இல்லை என கிராம நிர்வாக அலுவலரால் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் வழக்கின் ஒப்புதல் வாக்குமூல மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை என அறியமுடிகிறது.

IX) இறுதியாக சந்தேகத்தின் பலனை 2 வது எதிரிக்கு அளித்து 2 வது எதிரியை இ.த.ச. சட்டப்பிரிவு.379 ன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானித்து, 2 வது எதிரியை குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

11. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டுள்ள தடயப்பொருளுக்கான உத்தரவு இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட வழக்கான சிசி எண்.208/2026 வழக்கில் பகரப்படும் என உத்தரவிடப்படுகிறது.

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI
Date: 2026.04.29 17:12:38 +0000

என்னால் இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29-ம் நாள் என்னால் இந்நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI Date: 2026.04.29 17:12:45 +0000

நீதித்துறை நடுவர் எண்.I,

தஞ்சாவூர்.

**அரசு தரப்பு விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:**

அ.சா.1 -- திரு. பஹத் உசேன் (புகார்தாரர்)

அ.சா.2 -- திரு. முகமது ஆரிப்

அ.சா.3 -- திரு. முபாரக் அலி

அ.சா.4 -- திரு. ராமதாஸ் (காவல் ஆய்வாளர்)

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

| அ.சா.ஆ. எண்கள். | தேதி | ஆவணங்களின் விபரம் | ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்ட சாட்சிகள் |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 28.09.2020 | புகார் மனு | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | 28.09.2020 | பார்வை மகசர் | அ.சா.2 |
| அ.சா.ஆ.3 | 28.09.2020 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.4 |
| அ.சா.ஆ.4 | 28.09.2020 | மாதிரி வரைபடம் | அ.சா.4 |
| அ.சா.ஆ.5 | 30.01.2021 | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி | அ.சா.4 |
| அ.சா.ஆ.6 | 30.01.2021 | கைப்பற்றுதல் மகசர் | அ.சா.4 |
| அ.சா.ஆ.7 | 30.01.2021 | படிவம் - 91 (சிபி எண்.19/2021) | அ.சா.4 |

**அரசு தரப்பு சான்றுப்பொருள்:**

அசாபொ.1 - இருசக்கர வாகனத்திற்கான புகைப்படம்

**2 வது எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**- இல்லை.

S T KANIMOZHI Digitally signed by S T KANIMOZHI Date: 2026.04.29 17:12:51 +0000

**நீதித்துறை நடுவர் எண்.I,**

**தஞ்சாவூர்.**

**குறிப்பு:**

1) வழக்கு விசாரணையின் போது எதிரி ஜாமீனில் இருந்தார்.

2) எந்த ஒரு சாட்சியையும் விசாரணைக்காக மூன்று வாய்தாக்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3) வழக்கு முடிவு காவல்துறையினருக்குத் தெரிவிக்கப்பட்டது.